சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.33/2019

04.02.2026

பி.வா.சா.1 திருமதி. ஹேமலதா, க/பெ. தியாகராஜன்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதியிடம் நான் கடன் கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதே போல் எதற்காக காசோலையும் கொடுத்துள்ளேன் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 காசோலை தான் வாதியிடம் கொடுத்ததா என்றால் ஆமாம். காசோலையை கொடுத்தவாறு வாதி சொன்னவாறு பணம் எதுவும் வாங்கி கொடுக்கவில்லை. வாதி எனக்கு கடன் கொடுக்காததால் நான் கொடுத்த காசோலையை பணமாக்க செலுத்தினால் பணமாக்க கூடாது என வங்கிக்கு கடிதம் கொடுத்தேனா என்றால் இல்லை. வங்கியில் பணம் இல்லாததால் கொடுக்கவில்லை. வாதிக்கும் எனக்கும் பிரச்னை ஏற்பட்ட பின்னிட்டாவது நான் கொடுத்த கசோலையை கேட்டேனா என்றால் பலமுறை கேட்டேன். காவல்நிலையத்திலும் புகார் கொடுத்தேன். காவல்நிலையத்தில் 2, 3 முறை புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரை தான் கேட்கவேண்டும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதியிடம் நான் கடன் பெற்றதாகவும் தற்போது பணம் கொடுக்கமாட்டேன் என சொன்னதால் பிரச்னை ஏற்பட்டதாக சொல்லி புகார் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் வாதியிடம் நான் பெற்ற கடனை கொடுக்காததால் தகாத வார்த்தையால் பேசி அடித்து திட்டியதாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சாட்சி தன்னிச்சையாக வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்று பதில் அளிக்கிறார். வாதி காசோலையை வங்கியில் செலுத்திய பின்னிட்டு எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையெழுத்து மாறுபட்டதாக சொல்லி காசோலை திருப்பப்படவில்லை என்றாலும் போதிய பணமில்லை என்று தான் திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அதில் உள்ள கையெழுத்து

என்னுடையதல்ல. நான் வாதியிடம் பெற்ற கடனை திரும்ப செலுத்தக்கூடாது என்பதற்காக வாதியின் மீது பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. முதல்விசாரணை வாக்குமூலத்தில் கடன் பெற்றதை ஒப்புக்கொண்டுள்ளேன் எனறாலும் தற்போது கடனை திரும்ப செலுத்தக்கூடாது என்பதற்காக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி தாவா தொகையை வாதிக்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றாலும் தற்போது வழக்கிற்காக மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல. காசோலை படி தொகையை திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.